பக்கங்கள் 17 + 05

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 10 வியாழக்கிழமை 22.02.2024 அதிர்வு 206

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழக**

## விஞ்ஞான பீட மாணவர்கள் காலவரையற்ற போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் காலவரையற்று கற்றல் செயற்பாடுகளில் 04

# யாழ். சர்வதேச விமான நிலையத்துக்கு காணி சுவீகரிப்பு: விவரங்களைக் கோரி ஜனாதிபதியின் செயலாளர் கடிதம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளில் யாழ். சர்வதேச விமான நிலையத்துக்கென 500 ஏக்கரை மீள அளவீடு செய்வது தொடர்பாக பணிகளின் அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன் சந்திரவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கென மக்கள் மீளக் குடியேறியுள்ள வலிகாமம் வடக்கு பிரதேசத்தின் குரும்பசிட்டி ஜே/242, கட்டுவன் ஜே/238, 04







# கொக்குத்தொடுவாய் புதைகுழி 1994 - 1996 ஆம் ஆண்டுக்குரியது

## இதுவரை மீட்கப்பட்ட 40 மனித எச்சங்கள் தொடர்பில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ அறிக்கை

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட 40 மனித எச்சங்களும் 1994 ஆம் ஆண்டுக்கும் 1996 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத் தில் புதைக்கப்பட்டவை என்று தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். 04

# காதலர் தினத்தன்று மனைவிக்குப் பரிசளிக்க 29 பவுண் நகைகளைத் திருடிய கணவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

காதலர் தினத்தன்று தனது மனைவிக்குப் பரிசளிப்பதற்காக 29 பவுண் நகைகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய கணவர் உள்ளிட்ட இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 25 வயதான ஆணும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 49 வயதான பெண்ணுமே காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். 04



# பாக்குநீரிணையை நீந்திக் கடக்கவுள்ள திருகோணமலைச் சிறுவன் தன்வந்த்!

## வாழ்த்துத் தெரிவித்துள்ளார் அங்கஜன் எம்.பி.

(த.சுபேசன்)

மிக இளவயதில் பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் சாதனையை நிகழ்த்த பயணிக்கவுள்ள திருகோணமலையைச் சேர்ந்த ஹரிகரன் தன்வந்த் என்னும் 13 வயதான சிறுவனுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனுடைய யாழ். மாவட்ட அலுவலகத்தில் சாதனையை நிலைநாட்டவுள்ள சிறுவனைச் சந்தித்து தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

இலங்கை – இந்திய தேசங்களுக்கிடையிலான பிணைப்பை பலப்படுத்தும் பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் சாதனையை நிலைநாட்டும் பயணத்தை ஆரம்பித்துள்ளார் திருகோணமலையைச் சேர்ந்த செல்வன் ஹரிகரன் தன்வந்த். அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

13 வயதில் இந்தச் சாதனையை நிலைநாட்ட எடுத்துள்ள இவரது முதலடியானது, எதிர்கால சிறுவர்களுக்கு பெரும் நம்பிக்கையை விதைக்கும்.

இந்தியாவின் தனுஸ்கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னார் வரைக்குமான 32 கிலோமீற்றர் தூரத்தை நீந்திக் கடக்கும் சாதனை பயணத்தை தன்வந்த், எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி அதிகாலை 12.05 மணிக்கு இந்தியாவின் தனுஸ்கோடியிலிருந்து ஆரம்பிக்கின்றார்.

இந்தப் பயணத்தின் ஊடாக இருநாடுகளினதும் சிறுவர்கள், இளைஞர்கள் மத்தியில் நல்லுறவும்– நட்புறவும் வலுப்பெறும்.

இடைவிடாத பயிற்சியையும்– முயற்சியையும் சிறுவயதிலிருந்து கொண்டிருக்கும் தன்வந்த் போன்றவர்கள் இந்தத் தேசத்தின் பெருமையை நிலைநாட்டும் எதிர்கால நம்பிக்கைகள். அவர்களை ஊக்கப்படுத்துவது எமது கடமையாகும்.



திருமலை மண்ணின் மைந்தன் ஹரிகரன் தன்வந்தின் சாதனைப் பயணம் சிறப்பாக அமைய எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.–என்றுள்ளது.

# இந்திய உத்தர கண்டம் மாநில சுவாமி இலங்கைக்கு வருகை தந்து வழிபாடு!

## பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய உத்தர கண்டம் மாநிலத்தை சேர்ந்த சுவாமி கைலாஷ் நந்து ஜி ஹரிக்வார் மற்றும் மோக்ஷா டிரஸ்ட் நிறுவனத்தின் பிரதானிகள் ஆகியோர் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

அதன்பின்னர், அமைச்சருடன் இணைந்து இந்தக் குழுவினர் நுவரெலியா சீதா எலியவில் உள்ள சீதையம்மன் ஆலயத்துக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஆலயத்தின் வரலாறு, தொன்மை பற்றியும் கேட்டறிந்துள்ளனர்.

பிறகு இறம்பொடையில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கும் சென்ற வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான ஆன்மீகம் சார்ந்த உறவுகளை மேம்படுத்துவதன் அவசியம் பற்றியும் எடுத்துரைத்துள்ளனர்.



அதேவேளை, அமைச்சரின் முக்கிய குழுவினருடன் இணைந்து கண்டி, தலதா மாளிகைக்கு சென்று அங்கு வழிபாடுகளில் ஈடுபட்ட இந்த குழுவினர் மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசிபெற்றனர்.

இதன்போது, அமைச்சருடன் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி பொதுச் செயலாளர் எஸ்.செல்லமுத்து மற்றும் அமைச்சின் மக்கள் தொடர்பு அதிகாரி தயாளன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பில் நடந்த தாய் மொழி தினம்!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்ட பண்பாட்டு அலுவலகமும் மட்டக்களப்பு பொது நூலகமும் இணைந்து தாய்மொழி தினத்தை நேற்று புதன்கிழமை (21) மட்டக்களப்பில் நடத்தின.

மாவட்டகலாசார உத்தியோகத்தர் த.மலர்ச்செல்வன் மற்றும் நூலகர் த.சிவராணி ஆகியோரின் இணைத் தலைமையில் மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா மகளிர் மகாவித்தி யாலயத்தில் "வேர்களைத்தேடி..." எனும் தொனிப்பொருளிலும், மாலை நிகழ்வாக மட்டக்களப்பு பொது நூ லகக்கேட்போர் கூடத்தில் "மொழியும் ,வாழ்வும்,வழிபாடும்"எனும் தொனிப் பொருளில் சர்வதேச தாய்மொழி தினம் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் உரைகள், கவிதை, கிராமியப் பாடல்கள், கலந்துரையாடல் கள் இடம்பெற்றன.

இதன்போது எழுத்தாளரர்கள், இலக் கிய ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# அனுமதிப்பத்திரம் இன்றிக் கால்நடைகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவர் கைது!

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணை சந்திப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி கால்நடைகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இரவு நேரக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் வீதிச் சோதனையின் போது சந்தேகநபர்களைக் கைது செய்துள் ளனர்.

இதன்போது 7 எருமை மாடுகளை ஏற்றி வேறு பகுதிக்கு கொண்டு செல்ல முற்பட்ட கப்ரக வாகனமும் அதன் வாகன சாரதி மற்றும் வாகன உதவி யாளர் இருவரும் கைது செய்யப்பட் டுள்ளனர்.




கால்நடை கொண்டு செல்வதற்கான கால்நடை வைத்தியர் சான்றிதழ் இன்மை மற்றும் வாகனத்தில் கால்நடை கள் ஏற்று செல்லக் கூடியவாறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமை உள் ளிட்ட காரணங்களுக்காக இரண்டு சந்தேநபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

அதேவேளை, எழு கால்நடைகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட் டுள்ளனர்.

# இலங்கையிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளும் இம்முறை கச்சதீவு திருவிழாவில் பங்கேற்கக்கூடாது!

## இராமேஸ்வரம் விசைப் படகுச் சங்கத் தலைவர் கோரிக்கை

(ந.லோகதயாளன்)

தமிழக மக்களின் உணர்வுகளைப் புறந்தள்ளி இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் கச்சதீவு உற்சவத்தில் பங்கேற்கக்கூடாது என இராமேஸ்வரம் விசைப் படகுச் சங்கத் தலைவர் சேசுராயா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதான மீனவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் – அந்த மீனவர்களின் குடும்ப வாழ்வாதாரம்



கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ள நிலையில் கச்சதீவு உற்சவத்தை புறக்கணித்து எமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றோம்.

இந்தநிலையில் இலங்கை யாத்திரிகர்களின் பங்களிப்புடன் மட்டும் இடம்பெறும் கச்சதீவு உற்சவத்துக்கு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் செல்லத் தயாராகி வருகின்றனர் என்று அறிந்து மன வேதனை யடைகின்றோம்.

தமிழக மீனவர்களின் மன உணர்வை மதித்து இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளும் மனிதாபிமான அடிப்படையில் இம்முறை திருவிழாவைப் புறக்கணிக்க வேண்டும். மாறாக திருவிழாவில் பங்கு கொண்டால் அதற்கான விளைவை மத்திய அரசு எதிர் கொண்டே ஆக வேண்டும்.

இதேநேரம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்து மனிதாபிமானத்தைக்

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### காதலர்...

காதலர் தினத்தன்று வல்வெட்டித்துறை பகுதியில் முதியவர்கள் உள்ள வீட்டினுள் 29 பவுண் நகைகள் திருடப்பட்டன. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், யாழ்ப்பாணம் நகரில் நேற்று 4 பவுண் நகைகளை அடகு வைக்கச் சென்றபோது பெண்மணி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து பிரதான சந்தேகநபர் 25 பவுண் தாலியுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக நடவடிக்கைக்காக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

### கொக்குத்தொடுவாய்...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் இன்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த அறிக்கையின் விவரம் வெளியாகியுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளினுடையவை எனச் சந்தேகிக்கும் 40 மனித உடற்பாகங்கள், உடைகள் மற்றும் இலக்கத் தகடுகள் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட உடல்கள் தொடர்பிலும், மேலும் எந்தளவு பிரதேசத்தில் எத்தனை உடல்கள் இருக்கலாம் என்பது பற்றியும், மீட்கப்பட்ட உடல் பாகங்கள் எத்தனையாம் ஆண்டுக்குரியவை என்பது குறித்தும் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ ஆய்வில் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறு மேற்கொண்ட ஆய்வின் அறிக்கை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அது இன்று மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்த அறிக்கையில், மீட்கப்பட்ட மனித உடல் பாகங்கள் அனைத்தும் 1994 ஆம் ஆண்டுக்கும் 1996 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் புதைக்கப்பட்டுள்ளன என்றும், இவை எந்தவொரு மதச் சடங்கு முறைகளையும் பின்பற்றி அடக்கம் செய்யப்படவில்லை என்றும், இந்த உடல்கள் காணப்படும் இடத்தில் மேலும் 2 மீற்றர் தூரத்துக்கு நிலத்துக்கு கீழே இரு அடுக்குகளில் உடல்கள் காணப்படுகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை மீட்கப்பட்ட உடல்களில் ஆண்கள், பெண்களின் உடல் பாகங்கள் காணப்படுகின்றன என்று தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ அறிக்கையிட்டுள்ளார் என்று முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவா தெரிவித்தார்.

இதேநேரம் இந்தப் புதைகுழி அகழ்வுக்காக 60 இலட்சம் ரூபாவும், உடல்கள் ஆய்வுக்கு 60 இலட்சம் ரூபாவும் தேவை எனக் கோரப்பட்டபோதும் அந்த நிதிக்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### யாழ். சர்வதேச...

கட்டுவன் மேற்கு ஜே/239, குப்பிளான் வடக்கு ஜே/211, மயிலிட்டி தெற்கு ஜே/240 கிராமங்களில் காணி அளவீடுகள் இடம்பெறுகின்றன என்று மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், அது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் எழுத்து மூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

இதையடுத்து, குறித்த காணி அளவீடுகள் தொடர்பான விரிவான அறிக்கையை எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதிக்கு முன்பாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என ஜனாதிபதி செயலகத்தால் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த 16.02.2024 அன்று நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் அங்கஜன் இராமநாதன் எம்.பியால் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### விஞ்ஞான...

இருந்து ஒதுங்கி இருக்கத் தீர்மானித்துள்ளனர்.

விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் வரவு பிரச்சினைகள் தொடர்பில் பல்கலைக்கழக விசேட நிர்வாகக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் இன்று மதியம் முதல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பாக நேற்று விஞ்ஞான பீட பீடாதிபதி மற்றும் துறைத் தலைவர்களுக்கு, விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினரால் எச்சரிக்கைக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில் இன்று நண்பகலுக்குள் சாதகமான முடிவு கிடைக்காது விட்டால் காலவரையற்ற போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது.



(படங்கள்:- ந.லோகதயாளன்)

# திருவிழாவுக்குத் தயாராகும் கச்சதீவு

## வராத இந்தியர்களுக்கும் இடம் ஒதுக்கீடு
















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அம்பலப்படுத்துக!

அரசமைப்பு ஏற்பாடுகளையும் சட்டத்தையும் மீறி இணையவழி (நிகழ்நிலை) காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், அந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்படா விட்டால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

எந்த ஒரு சட்ட மூலமும் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடும் அரசமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் அடையாளம் கண்டால் அந்தச் சட்டமூலம் அல்லது அதன் அந்த ஏற்பாடு அந்த விடயத்தை ஒட்டி உயர்நீதிமன்றம் நிர்ணயித்த வழிகாட்டல் மூலம் மட்டுமே நிறைவேற்றப்பட முடியும் என அரசமைப்பின் 123 (4) ஆம் உறுப்புரை தெளிவாகக் கூறுவதை அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

இத்தகைய விதிமுறையை ஏற்றுக்கொள்ளாமல், அதனை மீறி, எந்த ஒரு சட்டத்தையும் நிறைவேற்றுவது சட்டவிரோதமானது. இந்தச் சட்டம் தொடர்பான விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டல் ஒன்பது சட்டப்பிரிவுகளில் முழுமையாக மீறப்பட்டுள்ளது. அதுவும் அப்படி இருப்பதாக எதிர்க்கட்சிகள் தெளிவாகச் சுட்டிக்காட்டவும் அதனைப் புறமொதுக்கி, மீறி, இந்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக சபாநாயகர் சான்றளித்திருக்கின்றமை மிக மிக மோசமான செயற்பாடு என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

நாட்டின் நீதி அமைச்சரும் கூட, இத்தகைய குறைபாட்டுடனேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார் என்ற விடயத்தையும் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் நினைவூட்டினார்.

இந்த விடயங்கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள தவறுகளைத் திருத்தும் விதத்தில், தற்போது நிறைவேற்றப்பட்டிருப்பதாக கூறப்படும் நிகழ்நிலை காப்பு சட்டத்திற்கு உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய திருத்தங்களை விரைந்து கொண்டு வருவதற்கு பொதுசன பாதுகாப்பு அமைச்சரை சட்டமா அதிபர் அறிவுறுத்தி இருக்கின்றார் என்ற தகவலையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டு இருக்கின்றார்.

இந்தச் சட்டம் தொடர்பான விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளைப் புறமொதுக்கியே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றன என்பது இப்போது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது.

ஆளும் தரப்பு ஆரம்பத்தில் அதனை மறுத்து வந்தாலும், இப்போது அந்த மறுப்புப் போக்கைக் கைவிட்டு விட்டது. ஏற்பட்ட தவறைத் திருத்தும் மார்க்கம் குறித்தே இப்போது அதிகம் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இப்படி உயர்நீதிமன்ற வழிகாட்டலுக்கு மாறாக, அதை மீறி, ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதும், அதற்கு சபாநாயகர் சான்றளித்திருப்பதும் மிகப் பாரதூரமான விடயங்கள். ஜனநாயகத்தின் அடிப்படை கோட்பாடுகளை - பண்பியல்புகளை - உதாசீனம் செய்யும் முரட்டுத்தனமான போக்கு இது.

இது விடயத்தில் தவறைத் திருத்த முனைவது மட்டும் தீர்வாகி விடாது. இப்படி மோசமான விடயம் அரங்கேறியமைக்கு யார் பொறுப்பு - காரணம் - என்பது அம்பலப்படுத்தப்பட வேண்டும். வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஜனநாயகத்தின் மாண்புகளை காக்க வேண்டிய சபாநாயகரா? அல்லது இவ்விடயங்களில் அவருக்கு உரிய வழிகாட்டல் மற்றும் பரிந்துரைகளை வழங்க வேண்டிய சட்டமா அதிபரா? அல்லது இந்தச் சட்டத்துக்குப் பொறுப்பான அமைச்சரா? அல்லது ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களா? அல்லது ஒட்டுமொத்த நாடாளுமன்றமுமா? - யார் இத்தவறுக்குப் பொறுப்பு?

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட விடயத்தில் தவறுகள் திருத்தப்படுவது மாத்திரமன்றி, தவறிழைத்த தரப்புகள் மக்களின் முன் - நாட்டின் முன் - வெளிப்படுத்தப்படவும் வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றமை போல இவ்விடயத்தை ஒட்டி சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டால், அது வெற்றிகரமாக நிறைவேற்ற படாவிட்டாலும், இவ்வாறு அரசமைப்பையும் சட்டத்தையும் உயர்நீதிமன்ற வழிகாட்டலையும் மீறி நாட்டில் சட்டம் ஒன்றைத் தவறான வழியில் நடைமுறைக்கு கொண்டு வந்த பிரகிருதிகள் யார் என்பதை நாடும் பொதுமக்களும் அறிந்து கொள்வதற்கு அதன் மூலம் வாய்ப்புக் கிட்டும்.

எனினும் இப்படி முறையற்ற விதத்தில் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டமையை ஆட்சேபித்து, அதற்கு நிவாரணம் கோரி, இந்தச் சட்டம் தொடர்பில் நாடாளுமன்ற விவாதங்களில் முனைப்புடன் பங்கு பற்றிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றின் ஊடாக உயர் நீதிமன்றத்தை நாடி இருக்கின்றார்.

அந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பது குறித்து விசாரணை நடத்தியுள்ள உயர் நீதிமன்றம் அது தொடர்பான தனது தீர்ப்பை ஒத்திவைத்திருக்கின்றது.

உயர்நீதிமன்றத்தில் இவ்விடயம் இருக்கின்ற காரணத்தினால், அதே விடயத்தை ஒட்டி நாடாளுமன்றத்தில் பகிரங்க விவாதம் நடத்துவதைத் தவிர்ப்பதற்காக சபாநாயகருக்கு எதிரான உத்தேச நம்பிக்கை இல்லாப் பிரேரணை தற்காலிகமாகத் தள்ளிப் போடப்படக் கூடும்.

எனினும் நீதிமன்றத்திலோ, தவறின் நாடாளுமன்றத்திலோ, இவ்விடயம் ஆராயப்பட்டு, இந்த விவகாரத்தில் நாட்டையும் நாடாளுமன்றத்தையும் மக்களையும் தவறாக வழிநடத்திய தரப்புகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

# விளையாட்டுக் கழகத்துக்கு உபகரணங்கள் வழங்கல்!



(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் "மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம்" எனும் செயற்றிட்டத்தின் கீழ் அல்-ஹாஜ் கலீல் முஸ்தபாவால் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

மருதமுனையில் காணப்படுகின்ற சுமார் 33 இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கும் வருடாந்தம் உதவிகளைத் தொடர்ந்து வழங்கும் இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் இது வரைக்கும் 12 கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்றிட்டம் தொடர்பாக மருதமுனை " விறைட் பியூச்சர்" விளையாட்டு கழகம் விடுத்த கோரிக்கையை அடுத்து இவை வழங்கப்பட்டுள்ளன.

# கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டை 2027 வரை கண்காணிக்கத் தீர்மானம்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் ஒப்பந்தம்



கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை கண்காணித்து வழிநடத்துவதற்காக தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத் திட்ட நிலையத்தை 2027 வரை பராமரிக்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கையொப்பத்துடன் அமைச்சரவை பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2027ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகள் இல்லாத நாடாக இலங்கையை மாற்றுவதற்கு இந்த ஒப்பந்தம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கண்ணிவெடி அகற்றும் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு, திட்டத்தை மேலும் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கண்ணிவெடி அகற்றும் வேலைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்ட முகாமைத்துவ பிரிவு தேவையில்லை. 2027 ஆம் ஆண்டுவரை வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின், வருடாந்தம் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனவும் அமைச்சரவை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனி நபர் பாதிப்பு கண்ணிவெடி தடை உடன்படிக்கையின் பிரகாரம், 2028 ஜூன் 01 ஆம் திகதிக்குள் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணியை முடிக்க அரசு கடமைப்பட்டுள்ளது.

ஜெனிவா சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் மத்திய நிலையத்தின் ஆதரவுடன் கண்ணிவெடிகள் தொடர்பான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் 2023 முதல் 2027 வரை இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை மூலோபாய வேலைத்திட்டத்தை தயாரித்துள்ளது.

இதன் கீழ், நாட்டை கண்ணிவெடிகளில் இருந்து விடுவிக்க தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடன் நெருக்கமாக பணியாற்ற அரசு எதிர்பார்க்கிறது.

2002 ஆம் ஆண்டு முதல் கண்ணிவெடி அகற்றும் வேலைத் திட்டம் நாட்டுக்குள் செயற்பட்டு வந்தது. 2010 ஆம் ஆண்டு 'கண்ணிவெடி அகற்றல் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம்' ஆரம்பிக்கப்பட்டது. கடந்த காலங்களில் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கிய இந்த நிலையம் தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவின் கீழ் இயங்குகின்றது. இது கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வழிநடத்துவதுடன் கண்காணித்தும் வருகிறது.

சர்வதேச உதவியின் அடிப்படையில் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரதம செயலாளர்களுக்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளருக்கும் இடையில்புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு மாநகர நூலகங்கள் இணைந்து நடத்திய விருது விழா!








(பழுவூரான்)

"உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது" எனும் தொனிப் பொருளில் தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றியீட் டியோருக்கான விருது வழங்கல் விழா மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை (20) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் எந்திரி என்.சிவலிங்கம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுக்குப பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனும், விசேட அதிதியாகக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும், முதலமைச்சின் செயலாளருமான என்.மதிவண்ணனும், கௌரவ அதிதி களாக மட்டக்களப்பு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.ஹறிகரராஜ், மட்டக்களப்பு மாநகர சபையின் பொறியி யலாளர் உள்ளிட்ட மாநகர சபையின் உயரதிகாரிகள், மட்டக் களப்பு மாநகர சபையின் பொது நூலகங்களின் நூலகர்கள் உள்ளிட்ட நூலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

பொது நூலகங்களால் எட்டு சஞ்சிகைகள் இதன்போது வெளியிடப்பட்டன. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நிகழ்த்தப்பட்ட போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்கள் உள்ளிட்ட வாசகர்களுக்கும் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# இடைநடுவில் கைவிடப்பட்ட வடசல் பாலம்; போக்குவரத்துச் செய்வதில் மக்கள் சிரமம்!



(ஹஸ்பர்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பூவர சந் தீவையும் - கல்லடி வெட்டு வானையும் இணைக்கும் வடசல் பாலம் புனரமைக்கப்படாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இதனால் அந்தப் பிரதேச மக்கள் பல்வேறு பிரச்சினை களை எதிர்நோக்கி வருகின்றனர்.

2021.10.16 ஆம் திகதி அன்று இந்தப் பாலத்துக்கான அடிக்கல் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் எம். எஸ். தௌபீக்கால் அடிக்கல் நடப்பட்டது.

ஆறு மாதத்துக்குள் வேலைகள் நிறைவடையும் என்று மக்களிடம் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் இன்னும் அவை நிறைவேற்றப்படவில்லை.

இந்தப் பகுதியில் சுமார் ஆறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயணம் செய்து வருகின்றனர்.விவசாயம், சிறு மீன்பிடி என பல தேவையான முக்கிய அன்றாட ஜீவனோ பாயத்துக்காக இந்த ஆற்றை கடந்தே செல்ல வேண்டியுள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமம் அடைந்துள்ளனர்.

மூன்று வருடங்கள் கடந்து நான்காவது வருடம் ஆரம்பித்த போதிலும் மக்கள் போக்குவரத்து செய்வதற்கான ஏற்ற வகையில் இன்னும் நிறைவு பாலத்தின் வேலைகள் செய்யப்பட வில்லை. இதனைப் பூரணமாக்கி வீதியை அமைத்து மக்கள் பாவனைக்கு கையளிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க அரச ஊழியர்களும் முன்வர வேண்டும்!

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவிப்பு





(ஆதம்)

பொருளாதார நெருக்கடி மிக்க இக்கட்டான சூழ்நிலையில் அரச ஊழியர்களும் நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

பலநோக்கு அபிவிருத்தி செயலணி திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நேற்று (21) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கு பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார சேவையைப் பொறுத்தவரையில் சுகாதார ஊழியர்களின் பணி மிகப் பிரதானமானது. கடந்த காலங்களில் நீங்கள் வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் ஏதோ ஒரு அடிப்படையில் சுகாதார சேவையில் இணைக்கப்பட்டுள்ளீர்கள். இது மிகவும் பெறுமதியான தொழிலாகும்.

பொருளாதார நெருக்கடிமிக்க சூழ்நிலையில்தான் அரசு இவ்வாறானதொரு நியமனத்தை வழங்கியது என்பதை இங்குள்ள சகலரும் நினைவில் கொள்ள வேண்டும். அந்த வகையில் சுகாதார சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட நாம் பொறுப்புடன் செயற்பட்டு நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டும்.

சுகாதாரத் துறையானது ஒரு சேவை என்பதைச் சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாகச் சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுவோர் கடமைக்கு மேலதிகமாகச் சேவையாற்றுகின்றனர்.

எனவே பலநோக்கு அபிவிருத்தி செயலணி திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுவோர் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பாக்கியமாகக் கொண்டு நாட்டினதும் நாட்டு மக்களதும் நலன்கருதி சேவையாற்ற வேண்டும்.– என்றார்.

# வவுனியா செட்டிகுளம் ம.வியில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வு







வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் 'தைப் பொங்கல் விழா' விழா இவ்வாண்டும் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பும் தனித்தனி பானையாக 18 பானைகள் ஒரே மைதானத்தில் வைக்கப்பட்டு பாரம்பரிய முறைப்படி பொங்கல் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக வெங்கல செட்டிகுள பிரதேசச் செயலாளர் இ. பிரதாபனும், சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் முனைவர் இ.நா.ஸ்ரீ ஞானேஸ்வரனும் கலந்து கொண்டனர்.

முட்டி உடைத்தல், கிளித்தட்டு உட்பட இன்னும் பல பாரம்பரிய விளையாட்டுகளும் இடம்பெற்றன. நூறு மாணவர்கள் கலந்துகொண்ட பாரம்பரிய நடனங்களும் இடம்பெற்றன.

# உடல்நலம் உங்கள் கையில்!

நமது முன்னோர்கள் உடல் நலத்தோடு ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதை மனதில் கொண்டு பல ஆயிரம் வருடங்களில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு பருவக் காலங்களுக்கு ஏற்ப உணவு முறைகளை வகுத்துள்ளனர்.

உடலில் நோய் பற்றுவதற்கு மூலக் காரணங்களாக அமைவது எமது அன்றாட உணவு முறைகளாகும். தன் உடல் நிலைக்கேற்ற உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்டு வந்தால் எக்காலத்திலும் நோய் பற்றாது, ஆரோக்கியத்துடன் வாழமுடியும்.

தினசரி நாம் உண்ணும் உணவில் வாதம், பித்தம், கபம் தாதுக்களை ஈடு செய்வதற்கு ஏற்ப உணவுப் பொருள்கள் அமைந்துள்ளன.

ஆகையால், உடலுக்கு ஏற்காததை விலக்கிவிட்டு எற்பதை மட்டும் உண்டால் நோய் உடலைப் பீடிக்காது. சத்துள்ள உணவு வகைகளையும் உண்பதால் எமது உடல் திடமாகவும் இருக்கும்.

நாம் உண்ணும் உணவில் பலவிதமான சத்துக்கள் அடங்கி இருந்தாலும், எம் உடலுக்குத் தேவைப்படுவது ஆறு வகையான சத்துக்களாகும்.


அதாவது புரதச்சத்து, மாச்சத்து, கொழுப்புச்சத்து, உலோகச்சத்து, நீர், விற்றமின் எனப்படும் உயிர்ச்சத்து போன்ற ஆறு வகையான சத்துக்கள் எம் உடலுக்கு அவசியமாகின்றன.

இந்தச் சத்துக்கள் அடங்கிய உணவை சீரான அளவில் உண்ணாமையால் உடல் பலவீனமடைந்து தனது செயற்றிறனை இழந்து நோய்க்கு ஆளாகி விடுகிறது.

இதன் காரணமாக நீரிழிவு, காசநோய், சுவாசகாசம், இருதய நோய், நரம்புத் தளர்ச்சி, மூட்டுவலி போன்ற பல நோய்கள் உண்டாகின்றன.

இந்த நோய்களைப் போக்குவதற்கும், உடலில் குறைந்துள்ள சத்துக்களைத் திரும்பப் பெறுவதற்கும் பாரிய செலவை செய்கின்றனர்.

இழந்த சக்தியைப்பெற விற்றமின் மாத்திரைகளை எடுக்கின்றனர். அதை குறிப்பிட்ட எல்லைக்குமேல்




எடுத்தால் புற்று நோய்க்கு வழி வகுக்கிறது என்று மருத்துவ நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஆகையால், மருந்து மாத்திரைகளை விட இயற்கையாவே கிடைக்கும் காய், கனி, கீரைகளில் விற்றமின் சத்துக்கள் உள்ளமையால் எமது அன்றாட உணவில் இதனைப் பயன்படுத்தி அதன் மூலம் நல்ல பலன்களைப் பெறலாம்.

விற்றமின் "ஏ" சத்து குறையும்போது நோய்கள் மிக எளிதாக எமது உடலை தொற்றிக்கொள் ளும். எலும்பு வளர்ச்சியும் மிகவும் பாதிப்புக்குள்ளாகும்.



தொகுப்பு:
பைஷல்
இஸ்மாயில்

வாழைப்பழம், மாம்பழம், பப்பாளிப் பழம், பச்சைக் கொத்தமல்லி, புதினாக்கீரை, அகத்திக்கீரை, பச்சைப்பட்டாணி, கரட், தக்காளி போன்றவற்றின் மூலம் விற்றமின் "ஏ" சத்தைப் பெறலாம்.

இதுபோன்று எமது உடல் நலத்தைக் காக்கும் விற்ற மின் "ஏ,பி, சி, டி, ஈ, கே" என்பவைகள் காய், கனி, கீரை வகைகளில் இருக்கின்றன.

ஆகையால், எல்லாச் சத்துக்களும் அடங்கிய இவற்றை நாம் உண்ணும் உணவில் எந்த சத்துக் குறைவு உள்ளதோ அதற்கேற்ப, உடல்நலம் பாதிக்காத வகையில் தேர்ந்தெடுத்து சேர்த்துக் கொள்ளவேண்டும். நாம் உண்ணும் உணவில் இவ்வகைகளைச் சேர்த்துக் கொள்வதின் மூலம் எம்மை நோய் அணுகாமல் உடல் பாதுகாப்புடன் வாழமுடியும்.

நாம் உண்ணும் உணவு, சத்துக்கள் நிறைந்த உணவாக உண்ணா விட்டால் வலுக்குறைந்து – சக்தி குறைந்து – சோர்வு ஏற்பட்டு எந்த வேலையும் செய்ய முடியாமல் களைப்பு ஏற்பட்டுவிடும்.

உடலில் போதிய சத்துக்கள் இல்லாவிட்டால் பலவிதமான நோய்கள் வருவதற்கு வாய்ப்பாகி விடுகிறது. ஆகையால் சத்துக்கள் அடங்கிய உணவு வகைகளை வரையறுத்து நாம் உண்ண வேண்டும்.

உடலுக்கு முக்கியமாகத் தேவைப்படும் புரதச்சத்து குறையுமானால் உடலின் தசைகள் பாதிக்கப்பட்டு உடல் வளர்ச்சி பாதிப்புக்குள்ளாகும். இதனால் இரத்த சோகை, கல்லீரல் கோளாறு போன்ற நோய்கள் உண்டாகும்.

உடலுக்கு உலோகச் சத்துக்கள் அவசியம் தேவை. அதில் முதன்மை பெற்றது இரும்புச் சத்தும், சுண்ணாம்புச் சத்தும் ஆகும். சுண்ணாம்புச் சத்துக் குறைவு ஏற்பட்டால் எலும்புகளையும், இருதயத்தையும் பாதிக்கும். இரும்புச் சத்துக் குறைவு ஏற்பட்டால் உடல் பலவீனமடைந்து சோகை தோன்றும்.

ஆகையால், உணவில் சத்துக்கள் அதிகம் நிறைந்துள்ள காய் – கீரை – கனிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதுபோன்ற உடல் நலம் காக்கும் எண்ணற்ற உயிர்ச் சத்துக்களும், உலோகச் சத்துக்களும் காய் – கனி – கீரைகளில் அடங்கியுள்ளன.

நாம் உண்ணும் உணவில் அறுசுவைகள் அடங்கி இருந்தால்தான் உடலில் நோய் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்க முடியும். இந்த அறுசுவைகளில் குறிப்பாகக் கசப்பு, துவர்ப்பு ஆகிய இரு சுவையுள்ள பொருள்கள் பெரும்பாலனவர்கள் உண்பது இல்லை. அதனால்தான் உடலில் நோய்கள் வருகின்றன.

நாம் உண்ணும் உணவில் காய் – கனி – கீரைகளைச் சேர்த்துக் கொண்டால் உடல் நலமுடன் இருக்கும். உடல் நலம் பாதிக்கப்பட்ட சிலர் பல மருந்துகளை எடுத்தும், அந்த நோய் குணமாவதில்லை. அவர்கள் காய் – கனி கீரையிலுள்ள சத்துக்களை உணவின் மூலம் பெற்று நோயைக் குணமாக்கிக் கொள்ள வேண்டும். நோய் வந்து வேதனைப்படுவதை விட வரும்முன் காப்பதே நல்லது.

நாம் ஒவ்வொருவரும் அவரவர் உடல் நலத்தைக் காக்கும் பொருட்டு எந்தச் சத்துக் குறைவால் உடல் பாதிக்கப்படுகிறது என்பதை அறிந்து அதற்கேற்ப சத்துள்ள காய் – கனி – கீரை வகைகளை உண்ண வேண்டும்.

பொதுவாக மாமிச உணவைவிட சைவ உணவு வகைகளில்தான் சத்துக்கள் அதிகமாக உள்ளன. குறிப்பாக காய், கனி, கீரைகளில் அபரிமிதமான சத்துக்களுடன் நோய் தீர்க்கும் ஆற்றலும் உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு நாம் செயற்படுவோமாக இருந்தால் எம்மை எந்த நோயும் அணுகாது என்பது திண்ணம்.

# மண்பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் சுன்னாகம் விக்கினேஸ்வரா!

(சுன்னாகத்தில் நீண்ட காலம் மருத்துவ சேவையாற்றிய டாக்டர் விக்கினேஸ்வராவின் இரண்டாம் ஆண்டு (22.02.2022) நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)


மருத்துவர் டாக்டர் ப. விக்கினேஸ்வரா எங்கள் குடும்ப மருத்துவர். அவரது கைராசியின் மகத்துவத்தை உணர்ந்து சுன்னாகத்தில் உள்ள அவரது மருத்துவமனை நோக்கி, என் தாயாரின் ஊராகிய நீர்வேலி மக்களும் படையெடுப்பர். அவரிடம் சென்று கதைத்தவுடனேயே பாதி வருத்தம் மாறிவிடும் என்ற நம்பிக்கை பலரிடமும் இருந்தது. இது அவரது வாய்ராசி என்றுதான் நினைக்கிறேன்.

சுன்னாகம் புகழ் டாக்டர் ப. விக்கினேஸ்வரா மண் பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் ஆவார். இடர்காலத்தில் அவர் நல்கிய மருத்துவப் பணிகளை யாழ்ப்பாணம் மண்ணும், மக்களும் என்றும் நினைவில் கொள்வர்.

எனது தந்தையின் ஊராகிய தென்மராட்சி சரசாலையில் நான் வசித்தபோதிலும் சிறுவயதில் ஏற்படும் நோய்களுக்கு சுன்னாகத்தில் உள்ள டாக்டர் விக்னேஸ்வராவின் மருத்துவமனைக்கே எனது தாயார் என்னை அழைத்துச் செல்வார். அன்றுமுதல் நான் டாக்டரின் பார்வையில் சரசாலைத் தம்பி.

அந்த உறவு இணைப்பும் ‘சரசாலைத் தம்பி’ என என்னை வாஞ்சையுடன் டாக்டர் அழைக்கக் காரணமாயிற்று. பாடசாலைக் காலத்தில் ஐங்கரனுக்கு இருந்த தமிழ் வேட்கை என்னை அவருடன் ஈடுபாடு கொள்ள வைத்தது. பாடசாலை மாணவனாக இருந்தபோதே அணையாத அறிவாலயம் என யாழ். நூலக எரிப்புக்கு எதிரான தனது கண்டனக் குரலைக் கவிதையாக ஐங்கரன் என்கிற தோழர் சார்ள்ஸ் படைத்திருந்தார். டாக்டர் கொண்டிருந்த தமிழ்ப்பற்று அவரது பிள்ளைகளிடம் விழுதெறிந்து கிளைபரப்பியமையைப் பலரும் அறிவர். டாக்டரின் பிள்ளைகள் புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் டாக்டர் வழியில் தாயகம் மீதான ஈர்ப்புடனேயே இன்றும் வாழ்கின்றனர். அதற்கு அவர்களது பரம்பரைப் பண்பில் உள்ள தாயகம் பற்றிய உணர்வே பிரதான காரணம் என்பேன்.

எனது நிகழ்வுகள் ஊடகங்கள் வாயிலாகப் பர



வலடையத் தொடங்கியதும் டாக்டரும் எனது இரசிகரானார். சரசாலைத் தம்பி பேசுது, சரசாலைத் தம்பியின் பட்டிமண்டபம் என பலருக்கும் என்னை அறிமுகப்படுத்தினார். ஒரு தந்தையைப் போலத் தயையுடன் என்னை நோக்கினார். நண்பர் ஐங்கரன் ஊடாக எனது ஒவ்வொரு நகர்வுகளையும் நயந்து இரசித்தார்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக சுன்னாகத்தில் அவர் நல்கிய மருத்துவச் சேவையால் பயனுற்றோர் பலர் உளர். இடர்காலத்தில் மண்பயனுற சேவை நல்கிய மக்கள் மருத்துவர் நல்கிய மருத்துவப் பணிகளை யாழ்ப்பாணம் என்றும் நினைவில் கொள்ளும் என்றே நம்புகிறேன்.

**சந்திரமௌலீசன் லலீசன்,**
அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

# ஜப்பான் தூதரகப் பிரதிநிதிகள் தௌபீக் எம்.பியுடன் சந்திப்பு!

**(அஸ்ஹர் இப்றாஹிம)**

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதரகப் பிரதிநிதிகளுக்கும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்குக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தில் நேற்று புதன்கிழமை (21) இடம்பெற்றது.

இதன்போது சமகால அரசியல் விவகாரம் தொடர்பாக முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் தற்போதைய நிலைமைகள் சம்மந்தமாகவும் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் பேசப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்துக்கு உதவுவதற்கு தாம் தயாராக இருப்பதாக ஜப்பான் நாட்டு தூதரக பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிகழ்வில் அல் – ஹிக்மா பவுண்டேசனின் தலைவர் இபாதுல்லாஹ் மௌலவியும் கலந்துகொண்டார்.





# பாரம்பரியமாக இணைக்கப்பட்ட நாடுகள் இந்தியா - இலங்கை!

## சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னான்டோ தெரிவிப்பு

இந்தியாவுக்கு இலங்கை கடன்பட்டுள்ளது. இந்தியா, இலங்கைக்கு சகோதரனாக இருப்பதோடு இந்தியாவும் இலங்கையும் பாரம்பரியமாக இணைக்கப்பட்டவை.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்று (21) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

அண்மைக்கால இக்கட்டான காலங்களில் இலங்கைக்கு உதவ இந்தியா முன்வந்துள்ளது. இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை அனுப்பியதற்காக இந்தியாவுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இந்தியா தனது முதல் வெளிநாட்டு விருந்தகத்தை அமைக்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் தம்மை குறைக் கூறுபவர்கள் இது போன்ற முதலீடுகளைத் தடுக்கவே விரும்புகின்றனர்.

எனினும், இந்தியா, இலங்கைக்கு சகோதரனாக இருப்பதோடு இந்தியாவும் இலங்கையும் பாரம்பரியமாக இணைக்கப்பட்டவை.

இது தொடர்பில் அரசியலமைப்புச் சட்டத்தை மீறியதாக யாரேனும் தம் மீது குற்றம் சாட்டி நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லட்டும். நீதித்துறையின் முன் வாதிட நான் தயாராக உள்ளேன்.

இதேவேளை மும்பையில் நடந்த வீதிக்கண்காட்சியில் நான் பேசிய 15 நிமிட பேச்சு செம்மை செய்யப்பட்டு திரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக மற்றும் மின்னணு ஊடகங்களில் அறிக்கையைத் திருத்துவதும் திரிப்பதும் சகஜமான விடயங்களாகும்.

எனவே, இன்று இலங்கைக்கு இணையப் பாதுகாப்புச் சட்டம் தேவைப்படுவதற்கு இதுவே காரணம்.- என்றார்.

# சிறையில் உள்ள போதை வியாபாரியின் பெண் உதவியாளர் பொலிஸாரால் கைது!



கொழும்பு மகசின் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ள போதைப் பொருள் வர்த்தகத்தின் ஈடுபட்டு வந்த ஒருவரது பெண் உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகசின் சிறைச்சாலையை அண்டிய சர்பண்டைன் மாவத்தையில் சந்தேக நபருக்குச் சொந்தமான வீட்டில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் இருக்கும் பெண் வழங்கும் தகவலுக்கு ஏற்ப போதைப் பொருளை பெற்றுக் கொள்வது, அதனை அவிசாவளை, கடுவலை பிரதேசங்களில் விநியோகம் செய்தல் போன்ற செயற்பாடுகளை சந்தேக நபர் மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் சந்தேக நபர் கைது செய்யப்பட்ட போது, 18 கிராம், 768 மில்லிகிராம் போதைப் பொருளும் அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிராமிய அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகத் தெளிவுபடுத்தல்





(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல் நிகழ்வு நேற்று புதன்கிழமை (21) நடைபெற்றது.

இந்த நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் அமைப்பு நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும், எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் நிறுவனத்தால் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்கான சத்துமா வழங்குதல், போசனை குறைந்த சிறார்களுக்கு உணவு விநியோகம், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல், மாதிரி வீட்டுத்தோட்டத்தை அமைத்தல், கால்நடைகள் வழங்குதல், மாவட்டத்தில் நிலக்கடலை செய்கையை ஊக்குவித்தல், அதற்கான தொழில் நுட்ப வசதிகள் வழங்கல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்காக இந்த நிறுவனமானது தமது நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன்போது மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ரீ. நிர்மலன், பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள், சுகாதார அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள், கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் நிறுவனத்தின் முக்கிய பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ‘வளிமண்டலவியல் ஓர் அறிமுகம்’ கொழும்பில் நூல் வெளியீட்டு விழா!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

எழுத்தாளர் முஹம்மட் சாலிஹீன் எழுதிய “ வளிமண்டலவியல் ஓர் அறிமுகம்” என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கை வளிமண்டலவியல் கேட்போர் கூடத்தில் நூலாசிரியரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அகில இலங்கைமக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் , உயர் நீதிமன்ற நீதிபதியரசர் ஏ.எச்.எம்.திலீப் நவாஸ், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஸிம் உமர் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக கொழும்பு பல்கலைக்கழக புவியியல் துறை தலைவி பேராசிரியை பரீனா றுசைக், அமானா வங்கி பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் முஹம்மட் அஸ்மிர், சுங்க திணைக்கள மேலதிக பணிப்பாளர் சம்சுதீன் நியாஸ் ஆகியோரும், விஷேட அதிதிகளாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிப் பணிப்பாளர் யூ.எல்.யாக்கூப், சிரேஷ்ட அறிவிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், மௌலவி எம்.ஆர்.அப்துல் றஹ்மான், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜெளபர் ஆகியோரும் கலந்து கெள்ளவுள்ளனர்.

இதன் போது நூலின் முதல் பிரதியை இலங்கை ஒளி பரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஸிம் உமர் பெற்றுக்கொள்ளவுள்ளார்.






# இரண்டு நாள்களுக்கு போராட்டம் நிறுத்தம்

## விவசாயிகள் சங்கம் அறிவிப்பு

கடன் தள்ளுபடி, குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லி நோக்கி செல்லும் பேரணியை இரண்டு நாள்களுக்கு நிறுத்துவதாக விவசாய சங்கங்கள் அறிவித்துள்ளன.

இது தொடர்பாக பஞ்சாப் கிசான் மஸ்தூர் சங்கர்ஷ் கமிட்டி தலைவர் சர்வான் சிங் பாந்தர் இன்று அளித்தப் பேட்டியில்,

“ஹரியாணா மாவட்டம் ஷம்பு எல்லையில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு இரண்டு நாள்களுக்கு டில்லி சலோ போராட்டத்தை நிறுத்திவைப்பதாக முடிவு செய்துள்ளோம். மத்திய அரசின் நடவடிக்கைகள் கடும் கண்டனத்துக்கு உரியவை. துணை இராணுவப் படையினரைக் கொண்டு எங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நாங்கள் ஏற்கெனவே எங்களது டில்லி சலோ பேரணி அமைதி வழியில் தான் நடைபெறும் என்று உறுதிபடச் சொல்லியிருந்தோம். ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தால் இளைஞர்கள் முன்னேற வேண்டாம் தலைவர்கள் மட்டும் டில்லி நோக்கிச் செல்வோம் என்று கூறியிருந்தோம். ஆனால் பேச்சுவார்த்தையில் இருந்து மத்திய அரசு தரப்பினர் ஓடிவிட்டனர். அப்போது தான் எங்களுக்கு அந்தத் துயரச் செய்தி வந்தது. ஷம்பு எல்லையில் 23 வயதான சுபாகரன் சிங் தலையில் குண்டடிபட்டு இறந்தார் என்று தெரிந்தது. மேலும் 3 பேர் படுகாயமடைந்தனர் என அறிந்தோம்.

இந்தச் சூழலில் இரண்டு நாள்கள் டெல்லி சலோ போராட்டத்தை நிறுத்தி வைக்கிறோம். இப்போதைக்கு இங்கேயே (ஹரியாணாவில்) போராட்டம் நடைபெறும். நிலவரத்தை ஆராய்ந்து அடுத்தக்கட்ட நகர்வு பற்றி முடிவெடுப்போம். ஏனெனில் மிகுந்த வேதனைக் குரிய சம்பவங்கள் பல நடந்துவிட்டன.

பேரணியில் வெறும் கைகளோடு நடந்து சென்ற விவசாயிகள் மீது ரப்பர் குண்டுகள் கொண்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. ஒரு விவசாயியை சாக்கில் கட்டி அவரது கால்களை உடைத்து வயல்வெளியில் வீசியுள்ளனர். விவசாயிகளின் 30 இற்கும் மேற்பட்ட ராக்டர்களை சேதப்படுத்தியுள்ளனர். நாங்கள் அமைதியாகத்தான் சென்றோம். எங்கள் மீதான இந்த வன்முறையை ஒட்டுமொத்த நாடும், ஏன் இந்த உலகம் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசின் போக்கு மிகவும் தவறானது.

வேளாண் விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்டபூர்வ அங்கீகாரம் அளிப்பது மிகவும் முக்கியமான விஷயம். இதில் மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, தென் இந்தியா என அனைத்து மாநிலங்களும் ஒன்றிணைந்து மோடி அரசுக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டும்.” – என்றார்.

# மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் திட்டம் கிரையோஜெனிக் இன்ஜின் சோதனை வெற்றி

மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்துக்கான சி.இ. 20 கிரையோஜெனிக் இன்ஜின் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ககன்யான் திட்டத்தின் மூலம்தரையில் இருந்து 400 கிலோமீற்றர் தொலைவுள்ள புவி தாழ் வட்டப் பாதைக்கு விண்கலம் மூலம் 3 வீரர்களை அனுப்பி, அவர்களை மீண்டும் பூமிக்கு பாதுகாப்பாக திருப்பி அழைத்துவர இஸ்ரோ முடிவு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தை 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. அதற்குமுன்னதாக பல்வேறு கட்ட பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அதன்படி, கிரையோஜெனிக் இன்ஜின் பரிசோதனையானது 7 கட்டங்களாக நடத்தப்பட்டு வந்தன.

அதன் இறுதிக்கட்ட பரிசோதனை திருநெல்வேலி மாவட்டம் மகேந்திரகிரியில் கடந்த 13 ஆம் திகதி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்து உள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோவின் அதிகாரப்பூர்வ எக்ஸ்



வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும்போது கலனின்தாங்கு திறன், செயல் திறன்,நிலைத்தன்மை ஆகியவை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது” எனகூறப்பட்டுள்ளது.

அத்துடன், சி.இ.20 கிரையோஜெனிக் இன்ஜின் புகைப் படமும் பகிரப்பட்டுள்ளது.




# இரட்டை இலை சின்னத்தை யாராலும் முடக்க முடியாது: அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி திட்டவட்டம்

இரட்டை இலை சின்னத்தை யாராலும் முடக்க முடியாது என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனி சாமி தெரிவித்துள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

"முதல்வர் ஸ்டாலின் மதுரைக்கு அறிவித்த திட்டங்கள் இதுவரை செயல்பாட்டுக்கு வரவில்லை. டைடல் பார்க் அறிவிப்புவெளியாகி 2 ஆண்டு களான நிலையில், நிதி ஒதுக்கப்பட வில்லை. மதுரை விமான நிலைய ஓடுதள விரிவாக்கம், மெட்ரோ ரயில் திட்டம் ஆகியவை கிடப்பில் போடப் பட்டுள்ளன. மதுரை கூட்டுக் குடிநீர் திட்டப் பணி மெத்தனமாக நடந்து வருகிறது.

பா.ஜ.கவில் இருந்து பலரும் அ.தி.மு.கவில் இணைகின்றனர். கட்சி மாறுவது ஜனநாயக உரிமை. அதே போல, போகிறவர்களையும் தடுக்க முடியாது. விருதுநகரில் அ.தி.மு.க. ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்ட ஜவுளிப் பூங்கா திட்டத்துக்கு தி.மு.க. அரசு 'ஸ்டிக்கர்' ஒட்டுகிறது.

தி.மு.கவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகாரத்தில் இருக்கின்றனர். அது கட்சி அல்ல, கொம்பெனி. தி.மு.க. வாரிசு அரசியல் செய்கிறது. ஒரு குடும்பத்துக்குள் கட்சி போகக் கூடாது என்பதுதான் எங்கள் கொள்கை. அ.தி.மு.கவில் சாதாரண தொண்டன்கூட, என்னைப் போன்று உயர்ந்த பொறுப்புக்கு வரமுடியும்.

மக்களவைத் தேர்தல் அறிவித்த பின்புதான் கூட்டணி குறித்து முடிவாகும். மக்களவைத் தேர்தலில் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்திதான் வாக்குக் கேட்க வேண்டும் என்பதில்லை. 2014 இல் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தி ஜெயலலிதா வாக்கு கேட்கவில்லை.

வேறு கட்சியிலிருந்து வந்தவர் சேலம் ஏ.வி.ராஜூ. கட்சியின் கட்டுப்பாடு, விதிகளை மீறியதால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்சியிலி ருந்து நீக்கப்பட்டார். அவர் கூறுவதை எல்லாம் பெரிதுபடுத்தக் கூடாது. பதவி இல்லாத விரக்தியில் அவர் பேசுகிறார்."
– என்றார்.

# மக்களவை தேர்தல் திகதி அறிவிப்புக்கு முன்னர் பிரதமர் மோடி தலைமையில் அமைச்சர்கள் கூட்டம்



தேர்தல் திகதி அறிவிப்புக்கு முன்பாக, எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சர்கள் கூட்டம் டில்லியில் நடைபெறுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு மக்களவை தேர்தல் அறிவிப்பை தேர்தல் ஆணையம் மார்ச் 10 ஆம் திகதி அறிவித்தது. கடந்த 2014 ஆம் ஆண்டில் மக்கள தேர்தல் தேதி மார்ச் 5 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதுபோல் எதிர்வரும் மக்களவை தேர்தல் தேதி மார்ச் முதல் அல்லது 2 ஆவது வாரத்தில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலுக்கு மாநிலங்களின் தயார்நிலை குறித்து ஆய்வு செய்யும் நடவடிக்கையை தேர்தல்ஆணையம் தொடங்கி விட்டது.

இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி மத்திய அமைச்சர்கள் கூட்டம் டில்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டம் சாணக்யாபுரியில் உள்ள சுஸ்மா சுவரான் பவனில் நடை பெறவுள்ளது. இதில் மத்திய அமைச்சர்கள், இணை அமைச்சர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

இதில் முக்கிய கொள்கை விடயங்கள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது. பலதிட்டநடவடிக்கைகளின் அமுலாக்கம் குறித்தும் மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

அரசு நிர்வாகம் தொடர்பான விஷயங்களில் பிரதமர் மோடி தனது தொலை நோக்கு பற்றி பேசுவார் எனத் தெரிகிறது. தேர்தல் திகதி அறிவிப்புக்கு முன்பாக கூட்டப்படும் இந்த அமைச்சரவை கூட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. மக்களவை தேர்தல் திகதி மார்ச் முதல் அல்லது 2 ஆவது வாரத்தில் அறிவிக்கப் படலாம் என குறிப்பிடப்படுகிறது.



# உக்ரைனில் பயிற்சி நிலையம் மீது இரண்டு ஏவுகணை தாக்குதல்கள்

## 60 ரஷ்ய படையினர் பலி

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு உக்ரைனில் உள்ள பயிற்சி நிலையம் மீது நடத்தப்பட்ட இரண்டு ஏவுகணை தாக்குதலில் குறைந்தது 60 ரஷ்ய படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூத்த தளபதியின் வருகைக்காக டொனெட்ஸ்க் பகுதியில் உள்ள தளத்தில் படையினர் கூடியிருந்தவேளை இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் வெளியான காணொளி காட்சிகளில் ஏராளமானோர் இறந்திருப்பதைக் காட்டுகிறது.

ரஷ்ய அதிகாரி ஒருவர் தாக்குதல் நடந்ததை உறுதிப்படுத்தினார், ஆனால் வெளிவரும் அறிக்கைகள் “மிகவும் மிகைப்படுத்தப்பட்டவை” என்று அவர் விபரித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்குவை சந்திப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு இந்த தாக்குதல் நடந்ததாக கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் உயிர் பிழைத்த இராணுவ வீரர் ஒருவர், படையணியின் தளபதிகள் தங்களை திறந்தவெளியில் நிற்க வைத்தனர் என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஹிமார்ஸ் ஏவுகணை அமைப்பில் இருந்து ஏவப்பட்ட இரண்டு ஏவுகணைகளால் அவர்கள் தாக்கப்பட்டனர் என கூறப்படுகிறது.

வீரர்கள் பலர் இறந்து கிடப்பதை காணொளிகள் காட்டுகின்றன. குறைந்தது 60 பேர் இறந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



# 45 ஜெர்சிகளை அணிந்து சிறுமி கின்னஸ் சாதனை

அமெரிக்காவின் வொஷிங்டனை சேர்ந்த சோபியா ஹைடன் என்ற சிறுமி ஒரே நேரத்தில் 45 ஜெர்சிகளை அணிந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

உலக சாதனை படைக்கும் போது, சோபியா அணிந்திருந்த ஒவ்வொரு ஜெர்சியையும் இடுப்பு வரை இழுக்க வேண்டியிருந்தது, இது கின்னஸ் உலக சாதனையை முறியடித்தது.

சோபியா தனது குடும்பத்தில் உலக சாதனை படைத்த முதல் பெண் அல்ல, மேலும் அவரது தாயாரும் உலக சாதனை படைத்துள்ளார்.

சோபியா உலக சாதனை படைக்கும் போது முதலில் சிறிய அளவிலான ஜெர்சியும், பின்னர் பெரிய அளவிலான ஜெர்சியும் அணிந்திருந்தார்.

முன்னதாக, இந்த உலக சாதனையை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 11 வயது சிறுவன் தோமஸ் உமாம்போ பெற்றிருந்தார். தோமஸ் 2022 இல் ஒரே நேரத்தில் 40 ஜெர்சிகளை அணிந்து உலக சாதனை படைத்தார்.



# ஹமாஸ் அமைப்புக்கு சுவிட்சர்லாந்தில் தடை

ஹமாஸ் அமைப்பை தடை செய்வதாக சுவிட்சர்லாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீதான ஒக்டோபர் 7 தாக்குதல்களுக்குப் பல நாள்களுக்குப் பிறகு, ஹமாஸ் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாக சுவிட்சர்லாந்து பட்டியலிட்டது.

சுவிஸ் அரசின் இந்த புதிய முடிவு ஹமாஸ் மற்றும் அதனுடன் இணைந்த குழுக்களுக்கு பொருந்தும்.

குழுவுடன் தொடர்புடைய சந்தேகத்திற்குரிய நிதி நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு அதிகாரிகளுடன் தகவல்களைப் பகிர்வதற்கான கட்டுப்பாடுகளையும் இது தளர்த்தும்.

ஹமாஸ்’க்கு ஆதரவான செயல்களுக்கு 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று சுவிஸ் அரசாங்கம் கூறியுள்ளது.



இந்த தடை ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது, ஆனால், நீடிக்கப்படலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.



# 200 வணிக நிறுவனங்கள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை

ரஷ்யாவில் தனிநபர்கள் உட்பட 200 வணிக நிறுவனங்கள் மீது ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் தடைகளை விதித்துள்ளது.

வர்த்தக பரிவர்த்தனைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.


மேற்படி வணிக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் உக்ரைனுக்கு எதிராக போரை நடத்த ரஷ்யாவிற்கு உதவியுள்ளன என ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

பக்கங்கள் 05

கனடா முரசு

வியாழக்கிழமை 22/02/2024

**பாரம்பரியக் கட்டடம் ஒன்றை இடிக்க பிரம்டன் நகரசபை நேற்று த்தீர்மானம்**



ஒன்ராரியோ பெப்.22
பாரம்பரியக் கட்டடம் ஒன்றை இடித்துத் தரைமட்டமாக்கும் பிரேரணையை பிரம்டன் நகர 02




# பொதுமக்களிடம் தவறான வார்த்தைப் பிரயோகம் டொரன்டோ பொலிஸ் அதிகாரிக்கு சம்பள வெட்டு

**ஒன்ராரியோ,பெப்22**

**சக ஊழியர்கள் மற்றும் பொது மக்க ளிடம் தவறான வார்த்தைப் பிரயோகத் தைப் பயன்படுத்தி ய மைக்காக டொரன்டோ பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு ஒரு வார கால சம்பளம் தண்டனையாக அறவிடப் பட்டுள்ளது.**

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற விசாரணைகளின் போது இந்தப் பொலிஸ் அதிகாரி தமது குற்றங்களை ஒப்புக்கொண் டமையை அடுத்தே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒப்புரவு மற்றும் உள்ளடக்கல் தொடர்பான 60 நாள்கள் கட்டாய பயிற்சியைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் பணிக்கப்பட்டுள்ளார்.

1999ஆம் வருடம் முதல் பொலிஸ் துறையில் பணியாற்றிவரும் இவர், கடந்த ஒரு வருடமாக நிர்வாகக் கடமையில் ஈடுபட்டு வருகின்றார்.

20022ஆம் வருடம் ஜூன் மாதத்தில் சக ஊழியர்களிடம் தவறான வார்த்தைகளைப் பிரயோகித்தமைக்காக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.




# பயங்கரவாத குழுவுக்குத் தகவல் பரிமாறிய அணு மின்னுற்பத்தி நிலைய ஊழியர் கைது

ஒன்ராரியோ,பெப்.22

ஒன்ராரியோ மின்னுற்பத்தி நிலையத்தின் முன்னாள் ஊழியர் ஒருவர் பாதுகாக்கப்பட்ட தகவல்களை வெளிநாட்டு அமைப்பு அல்லது பயங்கரவாத குழுவுக்கு பரிமாறியமைக்காக கைது செய்யப்பட்டு, தண்டனைக்கு ஆளாகியுள்ளார்.

பாதூக்கப்பட்ட தகவல்களை பரிமாறியமைக்காக தகவல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒன்ராரியோவில் வசிக்கும் ஜேம்ஸ் மௌசலிக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக நேற்றுப் புதன் கிழமையன்று (பெப்ரவரி 21) ரோயல் கனேடியன் மவுன்டட் பொலிஸார் தெரிவித்தனர்.

மிக முக்கியமான உட்கட்டமைப்புக்களை ஆபத்தில் வீழ்த்தும் நோக்குடன் ஜேம்ஸ் செயற்பட்டார் எனப் பொலிஸார் குற்றம் சுமத்துகின்றனர்.

வெளியிடப்பட்ட பாதுகாக்கப்பட்ட தகவல்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் வெளியாகியிராத நிலையில், இந்தத் தகவல் கசிவினால் பொது மக்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# பெண்களுக்கான பிரத்தியேக இடங்களில் பால்மாறிய பெண்களுக்கு இடமளியாதீர்!

## கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் கருத்து

ஒன்றாரியோ.பெப்.22


பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட விளையாட்டுக்களிலும், ஓய்வறைகளிலும் 'உயிரியல் ரீதியான ஆண்களுக்கு' இடமளிக்கப்படக் கூடாது என கனடாவின் எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலிவர் தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களில் பால்மாறிய பெண்களுக்கு இடமளிக்கப்பட வேண்டுமா எனவும், இதனை நிறுத்துவது தொடர்பில் கன்சர்வேட்டிவ் ஆட்சியில் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படுமா எனவும் எதிர்க்கட்சித் தலைவரிடம் தொடுக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே பொலிவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட இடமென்பது, பிரத்தியேகமாக அவர்களுக்கு மாத்திரமே இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலைகள், குளியலறைகள் மற்றும் விளையாட்டுக்கள் என்பவற்றில் பெண்களுக்கு தனியான பால் ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் கொள்கைத் திருத்தத்திற்கு கடந்த இலையுதிர் காலத்தில் இடம்பெற்ற கன்சர்வேட்டில் மாநாட்டின் போது அனைவரும் வாக்களித்திருந்தனர்.

# வாகனத் தரிப்பிட அபராதங்கள் டொரன்டோவில் உயருகின்றன



ஒன்றாரியோ,பெப்.22

டொரன்டோவில் சுமார் நூறுக்கு மேற்பட்ட குற்றங்களுக்கான வாகனத் தரிப்பிட அபராதங்கள் விரைவில் அதிகரிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் நூறு குற்றங்களுக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களின் காரணமாக வாகனத் தரிப்பிட விதி மீறல்களில் ஈடுபடுவோர் அதிக அபராதங்கள் எதிர்கொள்ளவுள்ளனர்.

உதாரணமாக, இந்த முன்மொழிவுகள் நிறைவேற்றப்படுமாயின் சைக்கிள் பாதையில் வாகனங்களை நிறுத்துவோருக்கு 150 டொலர்களில் இருந்து 200 டொலர்களாக அபராதம் அதிகரிக்கப்படவுள்ளது. தரிப்பிட இயந்திரங்களில் கட்டணத்தைச் செலுத்த தவறுபவர்களுக்கான அபராதம் 30 டொலர்களில் இருந்து 75 டொலர்களாக அதிகரிக்கப்படவுள்ளது.

டொரன்டோவில் தற்போது வாகனத் தரிப்பிட விதி மீறல்களுக்கான அபராதம் 15 டொலர்கள் முதல் 60 டொலர்கள் வரை காணப்படுவதாகவும், அயலில் உள்ள ஏனைய நகரங்களுடன் ஒப்பிடும் போது இது மிகவும் குறைந்த தொகை எனவும் அறிக்கை ஒன்று சுட்டிக்காட்டுகின்றது.

**பாரம்பரியக்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை நேற்று நிறைவேற்றியுள்ளது.

இதன் அடிப்படையில், பிரம்டனின் டவுன்டவுன் பகுதியை மேம்படுத்தும் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்தப் பாரம்பரிய கட்டடம் எதிர்வரும் இலையுதிர் காலத் தின் போது தரைமட்டமாக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நூறு வருடங்களுக்கு முன்னர் நிர்மா ணிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை இடித்து தரைமட்டமாக்குவதற்காக பிரம்டன் நகர சபையின் 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் 6 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# இணைய ஊடுருவலால் ஏற்பட்ட தாக்கம் டொரன்டோ பொது நூலகம் விசாரணை

ஒன்ராரியோ,பெப்.22

இணைய ஊடுருவல் தாக்குதலின் போது அட்டைதாரர்களின் விவரங்கள் களவாடப்பட்டுள்ளனவா என்பதைத் தீர்மானிக்க முடியாதிருப்பதாக டொரன்டோ பொது நூலகம் தெரிவிக்கின்றது.

பல மாதங்களாக நூலகத்தின் இணையத்தளத்தைச் செயலிழக்கச் செய்த இணைய ஊடுருவலினால் ஏற்பட்ட தாக்கத்தை டொரன்டோ பொது நூலகம் இன்னமும் ஆராய்ந்து வருகின்றது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் நூலக சபைக்கு அனுப்பி வைத்த அறிக்கையில், இந்த தாக்குதலினால் ஏற்பட்ட தாக்கம் குறித்த விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இணைய ஊடுருவல் தாக்குதலின் போது சமூகக் காப்புறுதி இலக்கங்கள் மற்றும் பிரதிகள் உள்ளடங்கலாக நூலக ஊழியர்களின் தனிப்பட்ட விவரங்கள், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் பிரதிகள் என்பன களவாடபட்டுள்ளன என ஏற்கனவே நூலகம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# டொரன்டோ - ஹெமில்டன் - வோட்டர்லூ விமான நிலையங்களிடையே பஸ் சேவை

ஒன்ராரியோ,பெப்.22

டொரன்டோ சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஹெமில்டன் மற்றும் வோட்டர்லூ பகுதிகளுக்கு 'சொகுசு' பஸ் சேவை ஒன்றை எயார் கனடா ஆரம்பித்துள்ளது.

நேற்றுப் புதன்கிழமை (பெப்ரவரி 21) எயார் கனடவினால் வெளியிடப்பட்ட செய்தி அறிக்கையில், இந்த புதிய சொகுசு பஸ் சேவை பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஹெமில்டனின் ஜோன் சி மன்ரோ சர்வதேச விமான நிலையத்திலிருந்தும், வோட்டர்லூ சர்வதேச விமான நிலையத்தில் இருந்தும் பரீட்சார்த்த சேவைகள் மே மாதம் முதல் ஆரம்பிக்கும் என அந்த செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலராடோவை தலைமையகமாகக் கொண்ட சொகுசு பஸ் நிறுவனம் ஒன்றுடன் இது தொடர்பில் ஒப்பந்தம் ஒன்றிற்கு வந்துள்ளதாக எயார் கனடா தெரிவித்துள்ளது.



# போர்க்குற்றவாளிகளுக்கு இடமளிக்காமை; எட்டு ஆண்டுகளாக அறிக்கை ஏதுமில்லை!

ஒன்ராரியோ,பெப்.22

போர்க்குற்றவாளிகளை நாட்டிற்கு வெளியில் வைத்திருப்பது தொடர்பான மத்திய அரசாங்கத்தின் பிரிவினால் கடந்த எட்டு ஆண்டுகளாக எவ்வித அறிக்கையும் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதி மற்றும் குடிவரவு சார்ந்த மத்திய அரசாங்கத்தின் திணைக்களங்கள், கனேடிய எல்லை சேவைகள் நிறுவனம் மற்றும் ரோயல் கனேடியன் மவுன்ட் பொலிஸ் ஆகிய பிரிவுகளுக்கு இடையிலான இணைப் பங்காளித் துவமாக போர்க்குற்றங்கள் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து நாஸிகளை கனடாவுக்குள் அனுமதித்துள்ளதாக 1987ஆம் ஆண்டில் போர்க் குற்றங்கள் தொடர்பான டெஸ்சென்ஸ் ஆணைக்குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து இந்த இணைப்பங்காளித்துவ முன்னெடுப்புக்கான தேவை உணரப் பட்டது.

2016ஆம் ஆண்டு முதல் தரவுகளைப் பெறுவதற்கு இந்த திணைக்களம் முயற்சித்து வருவதாகவும், விரைவில் அறிக்கை வெளியாகும் எனவும் எதப் பிரிவின் பேச்சாளரை மேற்கோள்காட்டி கனேடிய ஆங்கில இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### புகலிடக் கோரிக்கையாளர்களின் பிள்ளைகளுக்கான வசதி:

# மேன்முறையீட்டு நீதிமன்றின் உத்தரவை ஆட்சேபித்து முறையிட கியூபெக் முடிவு

கியூபெக்,பெப்.22

புகலிடக் கோரிக்கையாளர்களின் பிள்ளைகளுக்கு நாளாந்த பராமரிப்பு நிலையத்தில் அணுகலை வழங்கும் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து கியூபெக் மாநில அரசாங்கம் மேன்முறையீடு செய்யவுள்ளது.

கனேடிய உயர் நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீடு செய்யப்படும் என மாநில குடும்பநல அமைச்சர் நேற்றுப் புதன்கிழமையன்று (பெப்ரவரி 21) தெரிவித்தார்.

பெப்ரவரி ஏழாம் திகதியன்று கியூபெக்கின் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவில், கீழ் நீதிமன்ற உத்தரவை வழிமொழிந்து, மாநிலத்தின் மானிய நாளாந்த பராமரிப்பு நிலையத்தை அணுக புகலிடக் கோரிக்கையாளர்களின் பிள்ளைகள் அனுமதிக்கப்படுவார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.




நாளாந்த பராமரிப்பு நிலையங்களை அணுக முடியாமை என்பது அவர்களுக்கு அநீதியானது எனவும், தொழில் வலுவில் பங்களிப்பதற்கான பெண்களின் உரிமையை அது பாதிக்கும் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

கனடாவின் உயர்நீதிமன்றம் இந்த விடயம் தொடர்பில் தீர்ப்பளிக்கும் வரை, மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாதிருப்பதற்கான நிறுத்தற் கட்டளையை கோரி கியூபெக் மாநில அரசாங்கம் மனுத் தாக்கல் செய்துள்ளது.

அது வரை நாளாந்த பராமரிப்பு நிலையங்களுக்கு புகலிடக் கோரிக்கையாளர்களின் பிள்ளைகள் அனுமதிக்கப்படுவர் என மாநில அமைச்சு தெரிவித்துள்ளது.



# பூர்வீகக் குடிகளின் காணி அபகரிப்புக்காக 59 மில்லியன் டொலர்கள் இணக்க ஏற்பாடு

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் தீர்வு காணும் முதல் நாடு கனடா

பிரிட்டிஷ் கொலம்பியா,பெப்.22

காணி அபகரிப்பு தொடர்பில் பூர்வீகக் குடிகளுடன் 59 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இணக்கத்தினை மத்திய அரசாங்கம் எட்டியுள்ளது.

இந்த இணக்கப்பாட்டினை பூர்வீகக் குடிகளின் நலன்பேண் அமைச்சர் கெரி ஆனந்தசங்கரியும், மட்ஸ்கியு பூர்வீகக் குடிகளின் தலைவரான அலிஸ் மெக்கேயும் இணைந்து வெளியிட்டனர்.

வென்கூவரின் மின்னுற்பத்தி நிலையத்திற்காக 1908ஆம் ஆண்டில் நிலத்தை கையகப்படுத்தியமைக்கான நிவாரணமாக இதுவழங்கப்படுகின்றது.

பூர்வீகக் குடிகளை கடந்த காலங்களில் நடத்தியமை தொடர்பிலான தவறுகளை அடையாளங் கண்டு, சரியாக நடத்துவதற்கான மத்திய அரசாங்கத்தின் ஆர்வத்தை இது வெளிப்படுத்துவதாக இந்த இணக்கப்பாட்டை அறிவித்த அமைச்சர் ஆனந்த சங்கரி குறிப்பிட்டார்.

பூர்வீகக் குடிகளுடன் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான அத்திவாரமாக பல தசாப்தங்களான காலனித்துவ கொள்கைகளுக்கான முறையான நட்டஈடு அமைவதாக அந்த அறிக்கையில் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் இத்தகைய இணக்கத் தீர்வு காணும் முதல் நாடு கனட. என்பது குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச மாணவர் எண்ணிக்கை குறைப்பு குறை கூறுகிறது ஒன்ராரியோ மாநில அரசு

ஒன்ராரியோ,பெப்.22

சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு பொருளாதார ரீதியாக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என ஒன்ராரியோ மாநில அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பதாக மாநில அரசாங்கங்களிடம் கலந்தாய்வு செய்யப்படவில்லை என ஒன்ராரியோ மாநில இரண்டாம்-நிலைக் கல்வி அமைச்சர் ஜில் டன்லொப் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் இந்த தீர்மானம் தொடர்பில் தாம் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் அதிகரித்து வரும் வீடுகளிற்கான பற்றாக்குறைக்கு பதிலளிக்கும் விதமாக சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்படும் கற்றல் அனுமதிகளை 50 சதவீதத்தால் குறைப்பதாக கடந்த மாதம் குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.